Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 274/2023 in split up case No.CC No.811/2023

Evidence record u/s.299 CrPC

| | |
|---|---|
| | Prosecution PW 6 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கே. சத்யசுதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 22.09.2025

**எதிரி தலைமறைவு**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.7.2020 ம் தேதி 17.00 மணியளவில் கரூர் மாவட்ட குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது சுவிதா க/பெ.மோகன்ராஜ் நம்பர் 14 ராமானுார், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் என்ற முகவரியை சேர்ந்த கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு பெற்று C.நம்பர் 197/Petition/SP /Camp office 2019 ன்படி கரூர் மாவட்ட குற்றப்பிரிவில் பெறப்பட்டு C No.41/DCB/Krr/2019 ன்படி புகார் மனு பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம். இவ்வழக்கின் புகார்தாரர் M.Com.,M.Phil படித்துள்ளார்.

அவரது கணவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக இருப்பதாகவும், புகார்தாரர் கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் கட்டளைப்பணியாளர் மற்றும் ஜெராக்ஸ் ஆப்ரேட்டர் பணிக்கா விண்ணப்பித்துவிட்டு நேர்முக தேர்விற்காக வந்தபோது புகார்தாரர் வீட்டிற்கு அருகில் ஏற்கனவே குடியிருந்த நீதிமன்றத்தில் வேலை செய்யும் முத்தையா என்பவர் நீ படித்த படிப்பிற்கு இளநிலை நேர்முக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என சொன்னதன்பேரில் புகார்தாரர் அப்பணிக்கு விண்ணப்பித்த நிலையில் மேற்படி முத்தையா என்பவர் தனக்கு நீதிபதிகள் தனக்கு தெரியும் என்றும், அவரிடம் ரூ.7 லட்சம் பணம் கொடுத்தால் உடனடியா வேலை வாங்கி விடலாம் என சொன்னதாகவும், இதை நம்பிய புகார்தாரர் தனது தந்தையிடம் சொல்லி ரூ.7 லட்சம் பணத்தை தயார் செய்து கடந்த 18.11.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு மேற்படி முத்தையா குடியிருக்கும் மேற்படி முத்தையாவை நரிக்கட்டியூர் நவ்ரன் சாயப்பட்டறை அருகில் இருக்கும் அவரது வீட்டில் தனது தந்தை மற்றும் அவரது நண்பர் ராஜா அவர்களுடன் சென்று பார்த்து ரூ.7 லட்சம் பணம் கொடுத்ததாகவும் அப்போது முத்தையாவுடன் மற்றொருவர் இருந்ததாகவும், பணத்தை வாங்கிக் கொண்ட முத்தையா யாரிடமோ போனில் பேசிவிட்டு தான் நீதிபதியிடம் பேசியதாகவும், 15 நாட்களில் பணிக்கான ஆணை வந்துவிடும்என சொன்னதாகவும், அதன் பின்னிட்டு 6 மாத காலம் மேலாகியும் பணி ஆணை கிடைக்காததால் முத்தையாவிடம் நேரில் சென்று பணத்தை கேட்டபோது நீ கொடுத்த பணம் அவ்வளவுதான் இனிமேல் வேலை என்று எதாவது கேட்டு வரக்கூடாது. எனக்கு நீதிபதிகள் மற்றும் காவல்துறையில் நிறையபேரை தெரியும் என்று மிரட்டியதாகவும் எனவே மேற்படி முத்தையா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொடுத்த புகார் மனு பெற்று மாவட்ட குற்றப்பிரிவு கு.எண்.8/2020 ச/பி 406, 420 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 274/2023

| | |
|---|---|
| | Prosecution PW 6 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கே. சத்யசுதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 22.09.2025

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.7.2020 ம் தேதி 17.00 மணியளவில் கரூர் மாவட்ட குற்றப்பிரிவு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது சுவிதா க/பெ.மோகன்ராஜ் நம்பர் 14 ராமானுார், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் என்ற முகவரியை சேர்ந்த கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு பெற்று C.நம்பர் 197/Petition/SP /Camp office 2019 ன்படி கரூர் மாவட்ட குற்றப்பிரிவில் பெறப்பட்டு C No.41/DCB/Krr/2019 ன்படி புகார் மனு பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம். இவ்வழக்கின் புகார்தாரர் M.Com.,M.Phil படித்துள்ளார்.

அவரது கணவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக இருப்பதாகவும், புகார்தாரர் கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் கட்டளைப்பணியாளர் மற்றும் ஜெராக்ஸ் ஆப்ரேட்டர் பணிக்கா விண்ணப்பித்துவிட்டு நேர்முக தேர்விற்காக வந்தபோது புகார்தாரர் வீட்டிற்கு அருகில் ஏற்கனவே குடியிருந்த நீதிமன்றத்தில் வேலை செய்யும் முத்தையா என்பவர் நீ படித்த படிப்பிற்கு இளநிலை நேர்முக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என சொன்னதன்பேரில் புகார்தாரர் அப்பணிக்கு விண்ணப்பித்த நிலையில் மேற்படி முத்தையா என்பவர் தனக்கு நீதிபதிகள் தனக்கு தெரியும் என்றும், அவரிடம் ரூ.7 லட்சம் பணம் கொடுத்தால் உடனடியா வேலை வாங்கி விடலாம் என சொன்னதாகவும், இதை நம்பிய புகார்தாரர் தனது தந்தையிடம் சொல்லி ரூ.7 லட்சம் பணத்தை தயார் செய்து கடந்த 18.11.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு மேற்படி முத்தையா குடியிருக்கும் மேற்படி முத்தையாவை நரிக்கட்டியூர் நவ்ரன் சாயப்பட்டறை அருகில் இருக்கும் அவரது வீட்டில் தனது தந்தை மற்றும் அவரது நண்பர் ராஜா அவர்களுடன் சென்று பார்த்து ரூ.7 லட்சம் பணம் கொடுத்ததாகவும் அப்போது முத்தையாவுடன் மற்றொருவர் இருந்ததாகவும், பணத்தை வாங்கிக் கொண்ட முத்தையா யாரிடமோ போனில் பேசிவிட்டு தான் நீதிபதியிடம் பேசியதாகவும், 15 நாட்களில் பணிக்கான ஆணை வந்துவிடும்என சொன்னதாகவும், அதன் பின்னிட்டு 6 மாத காலம் மேலாகியும் பணி ஆணை கிடைக்காததால் முத்தையாவிடம் நேரில் சென்று பணத்தை கேட்டபோது நீ கொடுத்த பணம் அவ்வளவுதான் இனிமேல் வேலை என்று எதாவது கேட்டு வரக்கூடாது. எனக்கு நீதிபதிகள் மற்றும் காவல்துறையில் நிறையபேரை தெரியும் என்று மிரட்டியதாகவும் எனவே மேற்படி முத்தையா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொடுத்த புகார் மனு பெற்று மாவட்ட குற்றப்பிரிவு கு.எண்.8/2020 ச/பி 406, 420 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் பொதுமக்கள் யாவரும் நேரடியாக புகார் கொடுக்க முடியாது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலமாகவே புகார் கொடுக்க

முடியும். காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் எத்தனை நாட்களில் காவல்நிலையம் வரும் என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவிடும்போது வந்து சேரும். மாவட்ட கண்காணிப்பாளர் புகார் சம்பந்தமாக என்ன உத்தரவிடுகிறாரோ அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். அ.சா.1 கொடுத்த புகாரில் உள்ள தேதி 25.2.2019 என்றால் சரிதான். அந்த தேதியில்தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார்மனுவிற்கு கொடுக்கப்பட்ட ரசீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 25.2.2019 அன்றே மாவட்ட குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பப்பட்டு 3 நாட்களில் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டதா என்றால் conduct enquiry and report within 3 days என குறிப்பிடப்பட்டிருந்தது. அ.சா.ஆ.1 புகார் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையத்திற்கு 26.2.2019 அன்றே வந்திருக்கும் என்றால் சரிதான்.

மேலே குறிப்பிட்டவாறு 3 நாட்களில் விசாரணை நடைபெற்றதா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எனது மேல்அதிகாரிகள் உத்தரவின்படி எந்த தேதியில் என்ன சட்டப்பிரிவில் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என கூறுவார்கள். எதிரி யார் பெயரை குறிப்பிட வேண்டும் என்று கூறுவார்களா என்றால் இல்லை புகாரின்படி இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார் எந்த தேதியில் பெறப்பட்டது என்ற விபரம் முதல் தகவல் அறிக்கையில் 27.7.2020 ல் பெறப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கு பதிவு செய்த புகாரில் புகார் மனு கொடுத்த தேதி 25.2.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் பதிவு செய்த நாள் அன்று அ.சா.1 அங்கே இருந்தார். ஆனால் நான் அவரை விசாரணை செய்யவில்லை. பதிவு செய்யப்பட்ட புகாரில் இத்துடன் பணம் வழங்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தினை இணைத்தள்ளேன் என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அந்த புகாரில் புகைப்படம் யாரால் எடுக்கப்பட்டது என்ற விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காலதாமதாகவும் உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**